# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

ஆணை நாள் 02.11.2020

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 310/B/20**

திரு C. வைத்தியநாதன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு C. வைத்தியநாதன் மற்றும் பொது தகவல் அலுவலர், திருமதி கெஜலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 20.08.2019 தேதியிட்ட மனுவில், R. சிவமூர்த்தி, த/பெ கே.ராமசந்திரன், R. பழனிவேல், த/பெ கே.ராமசந்திரன் மற்றும் R. அம்பிகாபதி, த/பெ கே.ராமசந்திரன் ஆகியோருக்கு தானே புயல் நிவாரண நிதி எந்தெந்த நில சர்வே எண்களுக்கு, எவ்வளவு பரப்பளவுக்கு, எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்பதன் தகவல்கள் தொடர்பாக கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 12.11.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 08.01.2020 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் அவர்கள் தனக்கு காலதாமதமாக தான் தகவல்கள் கிடைக்கப்பெற்றது என்றும், கிட்டதட்ட 1 வருட காலமாக தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தகவல்கள் வழங்காத பொது தகவல் அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், ஆகையால் இனிமேலாவது காலம் தாழ்த்தாமல், உடனடியாக தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடவேண்டுமென்றும் தெரிவித்தார். தொலைபேசியின்

வாயிலாக, மேற்படி பொது தகவல் அலுவலரை தொடர்பு கொண்டபோது, பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டது என்று தெரிவித்து, 02.11.2020 தேதியிட்டு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் திருமதி வி.பர்வதவர்த்தினி என்பவரால் கையெழுத்திட்டு பெற்றுக் கொண்ட தகவலின் நகல் ஆகியவற்றை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அதனை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்குரிய தகவல் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை ஆணையம் பதிவு செய்து, இந்நேர்வில் இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் அவர்கள் தனக்கு ஒரு வருட காலமாக தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், குறிப்பிட்ட நேரத்திற்குள் தகவல்களை வழங்காத பொதுத் தகவல் அலுவலருக்கு தண்டனைகள் வழங்க உத்தரவிடவேண்டுமென்றும் தெரிவித்ததன் அடிப்படையில், தொலைபேசியின் வாயிலாக, மேற்படி பொதுத் தகவல் அலுவலரை ஆணையம் வினவியபோது, அதற்கு பொது தகவல் அலுவலர் தான் தற்சமயம் தான் பணியில் சேர்ந்ததாகவும், இனிவரும் காலங்களில் இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறாதவண்ணம் உடனுக்குடன் தகவல்கள் வழங்கிவிடுவதாகவும் தொலைபேசியில் தெரிவித்தார்.

5. தகவல் வழங்காத பொது தகவல் அலுவலர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுதாரர் தெரிவித்துள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது. சட்டப்பிரிவு 7ன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். மனுதாரரின் பிரிவு 6(1) மனுவை பெற்று கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் தகவல் தராதது கண்டனத்துக்குரியது. இதனை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. இனிவரும் காலங்களில் மேற்கண்ட நிகழ்வுகள் நடக்காத வண்ணம் பார்த்து கொள்ள வேண்டும் என்று பொது தகவல் அலுவலருக்கு ஆணையம் அறிவுறுத்தி, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 310/B/20</u>**

**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம்.

திரு C. வைத்தியநாதன்,
த/பெ சின்னத்தம்பி,
803, நடுத்தெரு,
பத்திரக்கோட்டை அஞ்சல்,
C.N. பாளையம்,
பண்ருட்டி தாலுக்கா,
கடலூர் மாவட்டம்.

Copy to: File
SCPA-06.11.20